2008 மே 5]

படிப்படியாகச் சீரமைக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னால், பக்க சுவர் கட்டித் தரவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் தேவைப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: சாலையைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னால், மேம்படுத்தவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. எனவே, படிப்படியாக அதை எதிர்காலத்திலே இந்த அரசு சீரமைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

199—

தொழிற்பயிற்சிப் பள்ளி

***16445—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்தும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

[2008 மே 5

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரையில், 99 சதவிகிதம் அளவிற்கு ஆதி திராவிட மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தொழிற்சாலைகளோ, ஆலைகளோ, பெரிய வியாபார ஸ்தலங்களோ இல்லை. அங்கே கூலித் தொழிலாளர்கள் பணிபுரிய தேயிலைத் தோட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. குறைந்த கூலியைப் பெற்று வருகின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகள், கோவையிலே இருக்கக்கூடிய ஒரேயொரு தொழிற்பயிற்சிப் பள்ளிக்கு வந்து படிப்பதற்கு வசதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் வால்பாறை தொகுதியிலே ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளி தொடங்க மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 59 தொழிற்பயிற்சி நிலையங்களும், 605 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளி உள்ளதாகச் சொன்னார்கள்; மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அங்கே உள்ளன; 34 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், இட ஒதுக்கீட்டின்படி, 18 விழுக்காடு பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் 50 விழுக்காடு; அதாவது, Government Quota மூலம் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு விதிகளின்படி செய்யப்படுகின்றன. எனவே, அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இந்நிலையில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாகத் தனியாகத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுடைய தலைமையில் பல்வேறு அரசு நலத் திட்டங்களை ஆதி திராவிட மக்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறது. இந்த வேளையில், ஆதி திராவிட மாணவர்களுக்குப் பள்ளிகள் நடத்திக் கொண்டிருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறை, ஏன் தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க முன்வரக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மிகவும் வறுமையிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களைக் காப்பாற்றுகின்ற வகையில், மீண்டும் மறுவாழ்வு வழங்குகின்ற வகையில், வால்பாறை தொகுதியில் இருப்பதைப்போல தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களில் 10 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவ, மாணவிகளுக்கு, ஆதி திராவிடர் நலத் துறை சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க ஏன் முன்வரக்கூடாது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத் தற்போது தொழிற்பயிற்சி மையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் அவருடைய கோரிக்கையைத் தொழிலாளர் நலத் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அத்துறை விரும்புகின்றபோது தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.